1984 மார்ச் 30]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பயனீட்டாளர்களுக்கு மின்வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளில் ஒரு நிபந்தனை, முன்னால் எல்லாம் குறிப்பிட்ட நாட்களுக்குள் பணம் கட்டவில்லை என்றால், திரும்பவும் பணம் கட்டுகிற போது 5 ரூபாய் சேர்த்துக் கட்ட வேண்டும் என்று இருந்தது. இப்போது அந்த 5 ரூபாயை 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். எனவே 1 நாள், 2 நாள் கழித்து, ஞாபகமறதியாகக் கட்ட மறந்துவிட்டு, பின்னர் போய் பணம் கட்டும்போது 10 ரூபாய் என்று சேர்த்து வாங்குவதை, 5 ரூபாயாகக் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ரூபாயின் மதிப்பு குறைந்து வருகிற இந்தக் காலத்தில் இது ஒன்றும் பெரிதல்ல

•

நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் திட்டம்

512—(*வினா எண் 17247) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நாகப்பட்டினத்தில் சாலையோர விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 12.50 இலட்சம்.

(ஈ) முறையாக முடிவெடுத்தபின் வேலை தொடங்கப்படும்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினம் ஒரு மேஜர் சென்டர். பயணிகளைப் பொறுத்தவரைக்கும், நாகூருக்கு இலட்சக்கணக்கான

[1984 மார்ச் 30

ஜனங்கள் வருவதும், அதேபோல் வேளாங்கன்னி ஆலயத்திற்கு இலட்சக்கணக்கான ஜனங்கள் வருவதும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து பயணிகள் கப்பல் மூலமாக நிறைய பேர்கள் வருவதுமாக இந்த இடம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட இடத்தில் இன்று சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் இல்லாததினால், அங்கே தனியார்கள் மிகவும் சுகாதாரமற்ற முறையில் அவர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள், இங்கு இடம் பற்றாக்குறையிருப்பதால் வெளிநாட்டிலேயிருந்து வருகின்றவர்கள் ரோட்டிலே தங்கக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்தத் தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையான அளவிலே, பெரிய அளவிலே தங்கும் விடுதிகளைக் கட்டும் திட்டத்தை வகுப்பதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான், முதலிலே ஒரு பெரிய விடுதியை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முதலீட்டிலே கட்ட முடியுமா என்பது பற்றி பரிசீலிக்கப்பட்டது. ஆனால், அப்படி பெரிய முதலீட்டிலே கட்டினால், எந்த அளவிற்கு அது வருமானத்தைத் தரும் என்கிற சந்தேகம் வந்ததற்குப் பிறகு, முதலிலே 12 படுக்கை வசதிகளைக் கொண்ட, இது போன்ற சாலை ஓரம் தங்கும் விடுதி என்று அழைக்கப்படுகின்ற மோட்டல் கட்டலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்காக 1.25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப் போல நாகூர், வேளாங்கன்னி, சிக்கல் போன்ற முக்கிய புனிதமான யாத்திரீகர்கள் ஸ்தலமாகவும், கப்பல் வருகின்ற காரணத்தாலே பயணிகளும் அங்கே வந்து செல்லுகிறார்கள், அந்த அளவுக்கு நாகப்பட்டினம் முக்கிய இடமாக இருக்கிறது. ஆனால், எவ்வளவு முக்கிய இடமாக இருந்தாலும் விடுதிகளிலே தங்குகிற பழக்கத்தை நம்முடைய மக்களிலே பலர் இன்னும் பற்றிக் கொள்ளாத காரணத்தாலே, பெரிய முதலீட்டிலே விடுதி கட்டினால் பயன் தருமா என்ற ஐயப்பாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இருக்கிறது. ஆகவே, நமக்கு நிலம் அதிகமாக இருக்கிற காரணத்தால் முதலிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதற்குப் பிறகு, நடைமுறைகளில் பார்த்து, அதை விரிவுபடுத்துகின்ற ஒரு திட்டத்தைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுத் திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தைப் பிரிக்க இருக்கிறார்கள். ஏற்கெனவே, நாகப்பட்டினத்தில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை மாற்றி, திருவாரூரிலே சுற்றுலா

வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதி கட்ட, அரசு மறு பரிசீலனை செய்தால் பொதுமக்களுக்கு நலமாக இருக்கும். எனவே, அரசு திருவாரூரிலே தங்கும் விடுதி கட்ட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் இப்போது உடனடியாக அவசரமாக தேவைப்படுகிற சூழ்நிலையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. திருவாரூர் தலைநகரமாக வந்ததற்குப் பிறகு அதைப் பரிசீலிக்கலாம்.

காரைக்குடியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் விடுதி கட்டும் திட்டம்

513—(*வினா எண் 18496) திரு. சிதம்பரம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் சுற்றுலாத் துறை மூலமாக விடுதி கட்ட திட்டமுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், சுற்றுலா விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் சாலையோர விடுதி ஒன்று கட்டும் திட்டம் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

மதுராந்தகம்–திண்டிவனம் இடையே சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம்

514—(*வினா எண் 19456) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-விழுப்புரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம் - திண்டிவனம் இடையே போக்குவரத்து வாகனங்கள் நிற்கக்கூடிய வகையில் கழிப்பிட வசதி, உணவு விடுதி போன்ற வசதிகளுடன் கூடிய சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுராந்தகம்-திண்டிவனம் இடையே, மேல்மருவத்தூரில், சாலையோர விடுதி ஒன்று கட்ட ஒரு கருத்துரு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.